பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 09 சனிக்கிழமை (20-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 85

# ராணுவத்துக்கு கீழ்ப்படியும் நிலையில் ஸ்ரீலங்கா அரசு!

## போரை நிறுத்தும் முடிவும் படையினரின் கைகளிலேயே

லண்டன், பெப்ரவரி 20

இராணுவத்துக்குக் கீழ்ப்படியும் நிலைக்கு ஸ்ரீலங்கா அரசு தள்ளப்பட்டிருக்கிறது. போரை நிறுத்தும் முடிவை மேற்கொள்ளும் அதிகாரமும் இப்போது படையினரின் வசம்தான் உள்ளது.

*பி.பி.ஸியில் நேற்றிரவு ஒலிபரப்பான — கல்பனா ஐசாக் எழுதிய — ஆய்வுக் கட்டுரை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.*

அக்கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:–

கடந்த பத்தாண்டுகளில் இலங்கையில் இராணுவம் ஒரு முக்கிய பலமான சக்தியாக மாறியுள்ளது. அரசியல் அதிகாரத்திலும் பலமான சக்தியாக இராணுவம் உள்ளது.

1980 களின் ஆரம்பத்தில் இலங்கை இராணுவம் பெயரளவில் வெறும் சடங்குக்காக மட்டுமே இருந்தது; அப்போது 10 ஆயிரம் பேருக்கு மேல் அதில் இல்லை. இப்போது ஒன்றரை லட்சம் இராணுவத்தினர் உள்ளனர். அரசின் மொத்தச் செலவீனத்தில் 10 சதவீதத்துக்கு அதிகமான பணம் நடப்பு ஆண்டில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு விவகாரங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதில் இராணுவம் உறுதியாக உள்ளது என்பதை கொக்கட்

(5ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு வானத்தில் ஒளிர்ந்த வண்ணக்கோலம்!

### இந்திய றொக்கட்டின் பேரியம் புகை

யாழ்ப்பாணம், பெப் 20

யாழ். குடாநாட்டு மக்கள் நேற்றிரவு சுமார் 6-45 மணியளவில் வடமேற்குத் திசையில் வண்ணக் கோலங்கள் ஒளிர்ந்ததைக் கண்டு வியப்புற்றனர்.

ஆரம்பத்தில் மஞ்சள் நிறமுடைய கோள வடிவமாக ஓர் ஒளிப்பிரகாசம் வடமேற்கு வானில் தோன்றியது. அதனைத் தொடர்ந்து அது பச்சை நிறமாக மாறி, வெண்ணிற புகை மூட்டமாக இரவு 7-30 மணிவரை வானில் ஒளிர்ந்தது. இந்த ஒளிப்பிரவாகத்திலிருந்து பச்சை நிறமுடைய பல ஒளிர் கீற்றுகள் வானத்தில் நீண்டு சென்றதையும் காண முடிந்தது.

இதேபோன்ற வண்ணக் கோலங்களை நேற்றிரவு தமிழகத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்களும் கண்டுகளித்ததாக சென்னை தொலைக்காட்சி அறிவித்தது.

காற்று மண்டலத்திற்கு மேலே உள்ள பகுதிகளில் காந்தத் தன்மையை ஆராய்வதற்காக, ஸ்ரீ ஹரிகோட்டா விண்வெளி நிலையத்திலிருந்து இரு சிறிய றொக்கெட்டுகள் ஏவப்பட்டன என்றும்—

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அங்கிலிக்கன் ஆயர் மீண்டும் யாழ். வருவார்

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோ இவ்வாரம் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் செல்லவிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பில் பெரும்பான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும், தமிழ்க் குழுப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்திய அவர், மீண்டும் யாழ். செல்ல இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

அவருடன் தென்னிலங்கை புத்திஜீவிகள் சிலரும் யாழ். செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## எய்ட்ஸுக்கு புதிய மருந்து! அமெ. விஞ்ஞானிகள் வெற்றி

சென்னை, பெப். 20

''எய்ட்ஸ்'' நோய்க்குக் காரணமான விஷக் கிருமிகளை ஒழிப்பதற்கு புதிய மருத்துவ முறைகளை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகளை மேற்கோள் காட்டி சென்னை தொலைக்காட்சி அறிவித்தது

இதுதொடர்பாக தாம் இதுவரை நடத்திய நீண்ட பரிசோதனைகள் இறுதியில் வெற்றியளித்திருப்பது குறித்து அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

'எய்ட்ஸ்' கிருமிகள் நோயாளியின் உடலுக்குள் பல்வேறு வடிவங்களில் உருவெடுத்து பல மடங்குகளாகப் பல்கிப் பெருகுவதால் அவற்றை அழிப்பது இதுவரை கடினமான செயலாக இருந்து வந்தது.

ஆனால் அமெரிக்க விஞ்ஞானிகளின் இடையறா முயற்சியினால் — நவீன மருத்துவ முறைகளின் கீழ் — அந்தக் கிருமிகளை ஒழிப்பதற்கு வழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. புதிய மருந்துகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

(5ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ குழு துண்டானது

தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறுவது குறித்து ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினால் ரெலோ அமைப்புக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெரிவுக் குழுவில் இருந்து ரெலோ விலக வேண்டும் என்று வற்புறுத்தி வந்த அந்த அமைப்பின் ஆலோசகர் ஸ்ரீ காந்தா அது ஏற்கப்படாத காரணத்தால், ஆலோசகர் பதவியை துறந்து விட்டார்.

அதேவேளை ரெலோ சார்பில் தெரிவுக் குழுவில் பங்கு பற்றி வந்த கருணாகரன், ரெலோவின் செயலாளர் நாயகம் பதவியைத் துறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் —

கொழும்பில் பலவாரங்களாகத் தங்கியிருந்த ரெலோ தலைவர் செல்வம் இந்தியாவுக்குசென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அதிபர்கள் தேர்வுப் பரீட்சை: வெட்டுப்புள்ளி குறையும்

கொழும்பு, பெப். 20

அதிபர் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான வெட்டுப் புள்ளி குறைக்கப்பட்டு, மேலும் ஒரு தொகுதியினருக்குப் பதவி உயர்வு வழங்கப்படவிருக்கிறது.

குறைக்கப்பட்ட வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் எஞ்சியோர் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படவிருக்கின்றனர்.

கல்விச் சேவைகள் சபை உயரதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழ் அதிபர் தரம் I இற்கான வெட்டுப்புள்ளி 178இல் இருந்து 177 ஆகவும் —

அதிபர் தரம் II இற்கான வெட்டுப்புள்ளி 163இல் இருந்து 158ஆகவும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தரம் IIIஇற்கான வெட்டுப் புள்ளியைக் குறைப்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### வட-கிழக்கு யுத்தத்தில் ஈடுபட

## மேலும் 6 ஆயிரம் துருப்புகள் ஏப்ரலுக்கு முன் படையில்!

கொழும்பு, பெப். 20

மேலும் ஆறாயிரம் படையினரை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஈடுபடுத்த ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

வடக்கு–கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினரின் எண்ணிக்கையை மேலும் 10 ஆயிரம் துருப்புகளால் அதிகரிக்க ஸ்ரீலங்கா அரசு ஏற்கனவே முடிவு செய்திருந்ததாகவும் அச்செய்தியில் கூறப்பட்டது.

இதன்படி கடந்த செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மூவாயிரம் பேர் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, நிரந்தர சேவையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் —

மேலும் மூவாயிரம் பேருக்கு தற்சமயம் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஓடிய படையினரைத் தேடி பொலிஸ், ராணுவம் வேட்டை

ஸ்ரீலங்கா படைகளில் இருந்து ஓடியோரைக் கண்டு பிடிக்க இராணுவத்தினரும், பொலிஸாரும் கூட்டாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

சுகவீனத்தை காரணமாக வைத்து சிலர் சேவையிலிருந்து நீங்கியதாகவும்—

வேறுசிலர் விடுமுறையில் வீடு சென்றுவிட்டு, கடமைக்கு திரும்பாமல் மறைந்து வாழ்வதாகவும்—

அவர்களைத் தேடியே இராணுவமும், பொலீஸாரும் கூட்டாக தேடுதலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### தப்பி ஓடித் தலைமறைவான

## 7 ராணுவ அதிகாரிகள் உட்பட 116 படையினர் பிடிபட்டனர்

கொழும்பு, பெப். 20

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 116 பேர் அண்மையில் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் கைது செய்யப்பட்ட இவர்களில் 7 பேர் இராணுவ அதிகாரிகள் என்றும்—

ஏனையோர் இராணுவச் சிப்பாய்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும், அவர்கள் முன்னர் கடமையாற்றிய இராணுவ முகாம்களில் விசாரணைக்காகத் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளனர் — என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-5)

## மட்டுநகரில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, பெப் 20

மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நாவலடிக் கடலில் கடற்படைக் கப்பல் ஒன்றும் தயார் நிலையில் தரித்து நிற்கிறது.

எதிர்வரும் ஜூலையில் ஜனாதிபதி இடம்பெயர் சேவையும், அதற்கு முன்னர் அமைச்சுகளின் நடமாடும் சேவைகளும் இடம்பெற இருப்பதை ஒட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மீட்பு நிதி

யாழ்ப்பாணம், பெப் 20

சண்டிலிப்பாய் மற்றும் உடுவில், தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவுகளில் இதுவரை தமிழீழ மீட்புநிதி செலுத்தத் தவறியோர் நாளை ஞாயிற்றுக்கிழமை அதனைச் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணி வரையும்—

உடுவில், தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவுகளைச் சேர்ந்தோர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரையும் — மீட்பு நிதியைச் செலுத்தலாம். (ஒ)

## கந்தளாயில் சிப்பாய் பலி!

கொழும்பு, பெப் 20

கந்தளாயில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக பொலீஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்தது

சேருநுவர - அல்லை வீதியில் ரோந்து சென்ற இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டார். (உ-3)

## தபால்களைப் படையினர் உடைப்பது சட்டவிரோதம்

யாழ்ப்பாணம், பெப் 20

ஸ்ரீலங்கா அரசின் தபால் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு வரும் தபால்களை மற்றொருவர் உடைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் — இவ்வாறு சட்டத் துறை நிபுணர்கள் கூறியுள்ளனர் என புலிகளின் குரல் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால்களும் —

வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் தபால்களும் தற்போது கொழும்பில் வைத்து படையினராலும் தேசவிரோதக் குழுக்களாலும் உடைக்கப்பட்டு வருகின்றன.

உடைக்கப்படும் கடிதங்களுக்குள் அனுப்பப்படும் காசோலைகள், தபால் கட்டளைகள் மற்றும் முக்கியமான ஆவணங்கள் என்பன அவர்களால் கையாடப்பட்டு வருகின்றன.

இது தபால் கட்டளைச் சட்டத்திற்கு முற்றிலும் முர

(5 ஆம் பக்கம் பார்க்க)

### சென்னையில் நேற்று

## இந்தி பிரசார சபையில் சக்திமிக்க குண்டு வெடித்தது

சென்னை, பெப். 20

சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திப் பிரசார சபை அலுவலகத்தின் இந்திப் புத்தகக் கடையில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் சபைக் கட்டடமும் அதன் அருகில் உள்ள கட்டடங்களும் அதிர்ந்தன.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் காரணமாக யாரும் காயமடையவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவில் ''தமிழ் இளைஞர் எழுச்சி மையம்'' என்று கையெழுத்திடப்பட்ட இரண்டு துண்டுப் பிரசுரங்கள் கிடந்தன என்றும் பொலீஸார் கூறினர்.

தமிழகத்தில் இந்தி திணிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக ஆளும் அ. தி. மு. க மற்றும் தி. மு. க., பாட்டாளி மக்கள் கட்சி, திராவிடர் கழகம் போன்ற அமைப்புகள் கிளர்ந்தெழுந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றத்தின் 13ஆவது இசை விழா

இடம்: மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

12ஆம் நாள் **20-02-93** சனி

கெயர் ஸ்தாபனத்தின் ஆதரவில்

**மாலை 4-00 — 5-00 மங்கள இசை**

நாதஸ்வரம்: எஸ். எஸ். சந்தானம், எஸ். சிவசுப்பிரமணியம், எஸ். செல்வக்குமார், எஸ். காளிதாஸ்

தவில்: ஆர். ஜெயராஜா, என். உதயகுமார், என். கணேசமூர்த்தி, என். கண்ணன்

**5-00 — 5-20 பாட்டு**

ஜி. கமலாஜோதி, ஆர். ரதிமலர், எஸ். ஜனசி, ஐ. மாமதி, ஜே. ஜானகி, பி. ஷர்மிளா, ஆர். புஸ்பமலர், வி. பெற்றிசியா, ரி. இராமதேவி.

வயலின்: சுபத்திரா கணேசன்
மிருதங்கம்: எஸ். ஹரிதரன்

**5-20 — 5-30 மிருதங்க இசை**

ரி. திருக்குமரன், எஸ். கமலதாஸன்

**5-30 — 6-00 பாட்டு** ரி. ரமேஷ்

வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: சதா வேல்மாறன்

**6-00 — 6-15 வயலினிசை**

ரஞ்சனி ராசலிங்கம், ரமணிக்கா சபாரத்தினம்
மிருதங்கம்: எஸ். கமலதாஸன்

**6-15 — 7-00 பாட்டு** சாரதா சச்சிதானந்தம்

வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: எம். சிதம்பரநாதன்

**7-00 — 7-15 மங்கள விளக்கேற்றல்**

சோ. சங்கரலிங்கம் (ஹரன் வர்த்தகர்)
எஸ். பி. சண்முகநாதன் (முகாமையாளர், ஆர். வி. ஜீ.)
எஸ். ரி. ராசையா (விற்பனை முகாமையாளர், ஆர். வி. ஜீ.)

தலைவர்: திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் (முன்னாள் இராமநாதன் கல்லூரி அதிபர்)

சிறப்பு விருந்தினர்: திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை (திட்டப்பணிப்பாளர், அகில உலக கெயர் - யாழ்ப்பாணம்)

**7-15 — 8-15 இசைக் கச்சேரி**

பாட்டு: எஸ். குமாரசாமி
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: கே. கண்ணதாசன்

**8-15 — 9-30 பரதநாட்டியம்**

பாரதி கலாமன்ற மாணவிகள்
நட்டுவாங்கம்: ஞானமணி செல்லையா
பாட்டு: வர்ணராமேஸ்வரன்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி

வாழ்த்துபவர்:

**ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்,**
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-4505)

---

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின்

## "திரிசங்கு சொர்க்கம்"

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்
21 - 02 1993 ஞாயிறு
காலை 10-00 மணிக்கும் மாலை 3-00 மணிக்கும்.
நுழைவுக் கட்டணம் ரூபா 10/-

குறிப்பு: பெப்ரவரி 6-ம் 7-ம் திகதிகளில் நடைபெறவிருந்த நாடகம் 14 - 03 - 1993 இல் காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 3-00 மணிக்கும் நடைபெறும்.

இந்து மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்.
(24577)

---

## அபராதம்

மோசடி செய்யப்பட்ட பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தி டுபாய் வழியாக ஜேர்மனிக்குச் செல்ல முயற்சித்த கிழக்கு மாகாணம்—வாழைச்சேனை வாசியான எஸ். டி. மூர்த்தி என்ற இளைஞருக்கு நீர்கொழும்பு நீதிவான் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இவரை குடியகல்வு அதிகாரிகள் கைது செய்தனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ராஜரட்ணம் விஜய கோபால் என்பவருக்குரிய பாஸ்போர்ட்டில் தனதுபுகைப்படத்தை ஒட்டி மோசடி செய்ததாக எதிரி நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

(த-எ)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள்

**B. A., B. COM. PART I**

பொருளியல்

**S. வரதராஜன்** B. A. (Hons)

MICRO ECON 10–11 சனி, ஞாயிறு
MACRO ECON 03–04 சனி, ஞாயிறு

ஆரம்பம்: 20 - 02 - 1993

குறிப்பு: 21-02-93க்கு பின்பு புதிதாக மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாரதிதாசன்**
கல்வி நிறுவனம் (BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4463)

---

## POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Further to the advertisement on the above course the relevant application forms and prospectus can be obtained from the Senior Asst Registrar/Academic Branch after a payment of Rs 25/- at the Finance Branch.

Those who have already obtained the application forms should return the old forms and collect the new ones with the prospectus after a payment of Rs. 15/-

- REGISTRAR.
University of Jaffna.
1993-02 18.

(C-4603)

---

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் (வ/து)

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும், நுகர்வோர்களுக்கும்
பங்குப்பணம் ரூபா. 100/-

1992ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்திற்கமைய உபவிதி 18(1) ஒரு பங்கின் பெறுமதி ரூபா. 100/- ஆகும்.

பங்குப்பணப் பெறுமதியை ரூ 100/- ஆக அதிகரிக்காத தற்போதைய அங்கத்தவர்கள் 05-03-1993ற்குப் பின்னர் அங்கத்துவ உரிமையை இழந்து சங்கத்தில் கிளைக்குழு உறுப்பினராகவோ, பொதுச்சபை உறுப்பினராகவோ, பணிப்பாளர் சபை உறுப்பினராகவோ பதவி வகிக்க முடியாததுடன், வாக்களிக்கும் உரிமையினையும் இழந்து விடுவர்.

05-03-1993ற்குப் பின்னர் பங்கு நிலுவை செலுத்தப்பட்டாலும், செலுத்திய திகதியில் இருந்து ஒரு வருடம் அங்கத்துவ உரிமையைப் பெற்றுக்கொள்வதற்குக் காத்திருக்க வேண்டும்.

இது தொடர்பாக நாம் கிளைவாரியாக கூட்டங்கள் நடத்தி மேற்படி சட்டத்திற்கு அமைய பங்குப் பணத்தைச் செலுத்தி தங்கள் தங்கள் உறுப்புரிமையை பாதுகாத்துக் கொள்ள இச்சங்கம் கோரிக்கை விட்டிருந்ததை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

எனவே இதுவரை தமது மீதிப் பங்குப் பணத்தை செலுத்தியவர்கள் தவிர ஏனைய அங்கத்தவர்கள் குறித்த இறுதித் தினமான 05-03-1993க்கு முன்னர் மீதிப் பங்குப் பணத்தைச் செலுத்தி, தொடர்ந்து உங்கள் அங்கத்துவத்தைப் பேணி சங்க வளர்ச்சியிலும் பங்கெடுத்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இதுவரை அங்கத்துவம் பெறாதோரும் 05-03-1993 இற்கு முன் அங்கத்துவத்தைப் பெற்று, தொடர்ச்சியான உரிமைகளைப் பெற முன்வருமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

மேலதிக விவரங்களுக்குச் சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அ. குகதாசன்,
செயலாளர்.

சி. கணபதிப்பிள்ளை,
தலைவர்.

(சி-4540)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 11 — 06 — 1953
இறப்பு: 20 — 02 — 1989

### தேவநாயகம் மரியாம்பிள்ளை

"என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே! மரணத்திலும் நேசியுங்கள்."

இவரின் பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதரி.

இல. 66, பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(24510)

---

## யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

மார்ச் மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்

பிரதம விருந்தினர்கள்:—
திரு. A. கதிர்காமர்
திருமதி மகிழ்மலர் கதிர்காமர்

பழைய மாணவர்கள், பெற்றோர், நண்பர்கள்
★ அன்புடன் அழைக்கப்படுகின்றனர் ★

— அதிபர்.

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(சி-4601)

---

22 வருடங்களாக

## ஆயராகப் பணி புரிந்து ஓய்வு பெறும்



யாழ். தென்னிந்தியத் திருச்சபையின்

### பேராயர் டி. ஜே. அம்பலவாணர்

அவர்களை

வாழ்த்தி பிரியாவிடை அளிக்கின்றோம்

— மானிப்பாய் பொது மக்கள்.

இவரது முயற்சியால் நடைபெறும் சில முக்கிய வேலைகள்:

★ 5000க்கும் மேற்பட்ட 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு உணவு மற்றும் பாடசாலைக்கு முந்திய கல்வி.
★ 2000க்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு விடுதி மற்றும் கல்வி, உணவு, உடை வசதி.
★ 2000க்கும் மேற்பட்ட வீடுகள் குடிசைகள் (இடம் பெயர்ந்தோருக்கு)
★ விதவைகள் சுயவேலை வாய்ப்பு.
★ விதவைகளுக்கான நிவாரணம்.
★ தொழிற்கல்வி பயிற்சி நிலையங்கள்.
★ இலவச வைத்திய சேவை,
★ பெருமளவு இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம்.

தமிழ் மக்களுக்கான விடிவுக்காகவும் சுயநிர்ணய உரிமைக்காகவும் துணிந்து குரல் கொடுக்கும் ஆயரை வாழ்த்துவோர்.

மானிப்பாய் தென்னிந்தியத் திருச்சபையினர்.
அளவெட்டி தென்னிந்தியத் திருச்சபையினர்.
சண்டிலிப்பாய் தென்னிந்தியத் திருச்சபையினர்.
சண்டிலிப்பாய் பகல் பராமரிப்பு நிலையத்தினர்.
தோப்பு பகல் பராமரிப்பு நிலையத்தினர்
அளவெட்டி பகல் பராமரிப்பு நிலையத்தினர்.
மானிப்பாய் அருள்மனை ஆண்கள் இல்லத்தினர்.
மானிப்பாய் கிறீன் ஞாபக வைத்தியசாலையினர்
மானிப்பாய் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தினர்.
மானிப்பாய் வை. எம். சி. ஏ யினர்.
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையினர்.
மானிப்பாய் கத்தோலிக்க திருச்சபையினர்.

மானிப்பாய் மருதடி விநாயகர் வழிபடுவோர் சங்கம் மற்றும் பரிபாலன சபையினர் மானிப்பாயில் சேவையாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களான, தமிழர் புனர் வாழ்வுக்கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மானிப்பாய் கிளை, கியூடெக் ஆகியோர்.

இன்று 20 - 02 - 1993 சனிக்கிழமை
மாலை 3-00 மணிக்கு
மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில்
நடைபெறும்.

**பிரிவுபசார நிகழ்வுக்கு**
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

— அருட் திரு. அ. ஜெயக்குமாரன்.

(சி-4454)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
## ★ தேர்த் திருவிழா சிறப்பு மலர் ★
20 - 02 - 1993

# வினை தீர்க்கும் ஸ்ரீவீரகத்தி விநாயகன் இன்று தேரேறி வந்து பக்தர்களுக்கு அருள் புரிவான்

செந்தமிழும், சிவநெறியும் செழித்து வளரும் திருநெல்வேலியில் வாழ்கின்ற சைவப் பெருமக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படும் தெய்வமாக விளங்குபவர் பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானே. வினை தீர்க்கும் அந்தப் பெருமானின் திருநாமத்தை ஒரு தரம் சொன்னால் அடியார்களின் உள்ளமெல்லாம் உருகும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவரது பாதக் கமலங்களை இறுகப்பற்றி உள்ளன்புடன் பூசித்து வழிபடுபவர்களை வாழ்வில் எத்தகைய துன்பங்களும் அணுகமாட்டா என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை.

பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி அவன் பாதார விந்தங்களை அன்புடன் பணிந்து வழிபாடு செய்து வந்தவர்கள் அப்பனின் அருளால் தமது பிணிகள் நீங்கியும், கவலைகள் ஒழிந்தும், துன்பங்கள் அகன்றும் பற்பல நன்மைகளைப் பெற்றிருப்பதனால்தான் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நாள்தோறும் பக்தர்கள் பலர் ஸ்ரீ வீரகத்தி விநாயகனை நாடி வருகிறார்கள்

### தேர்த் திருவிழா

கடந்த 06 - 02 - 93 சனிக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமான இவ்வாலய வருடாந்த மஹோற்சவம் இன்று (20 - 02 - 93) தேர்த் திருவிழாவுடனும் நாளை தீர்த்த உற்சவத்துடனும் நிறைவு பெறுகிறது.

இவ்வாலயத்தில் தேர்த்திருவிழாவாகிய இன்று அதிகாலையில் விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். தொடர்ந்து கொடிமரப்பூசை நடைபெற்று பஞ்சமுக விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்து தீப அலங்காரங்களுடன் பூசைகள் நிறைவு பெற்று பஞ்சபுராணம் பாராயணம் செய்யப்படும். பின்னர் அலங்காரம் செய்யப்பட்ட பீடத்தில் ஆரோகணித்து ஆனைமுகப் பெருமான் மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, பக்தர்கள் மலர்கள் தூவ, கொடி, குடை ஆலவட்டங்கள் அசைந்து வர காலை 8 மணி அளவில் தேருக்கு எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

பஞ்சமுக விநாயகப் பெருமானின் அருள்மிகு திருக்



கோலத்தைக் கண்டு களிப்பவர்கள் புண்ணியப் பேறுடையவர்களே! தேரில் எழுந்தருளியதும் பெருமானுக்குத் தீபாராதனை நடைபெறும். அடியார்கள் நூற்றுக்கணக்கில் தேங்காய்களை உடைத்து தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வர். தேர் வடத்தை அடியார்கள் பிடித்துக் கொண்டு 'அரோஹரா' ''பழங்கிணற்றடி அப்பனுக்கு அரோஹரா'', ''வினை தீர்க்கும் வீரகத்தி விநாயகனுக்கு அரோஹரா'' என்னும் ஓசையுடன் தேரை இழுக்க அது அசைந்து செல்லும் காட்சி பார்த்துப் பரவசப்பட வேண்டியது.

விநாயகப் பெருமானுக்கு தீபாராதனைகள் நடைபெறும். நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியார்களையும், கற்பூரச் சட்டியை ஏற்றிய வண்ணம் கணபதியின் புகழ்பாடும் அன்பர்களையும், பஜனைப் பாடல்களைப் பாடிக்கொண்டு பெருமான் பவனி வரும் தேரைப் பின்தொடரும் பக்தர்களையும் வீதியில் காணும் போது எங்களையும் அறியாமலே எங்கள் உள்ளம் இறைவன்பால் ஈர்க்கப்படுகிறது

வெளி வீதியைத் தேர் சுற்றி ஆலய வாசலுக்கு வந்ததும் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு மஞ்சள் சாத்தி விசேட ஆராதனைகள் நடைபெறும். பின்னர் பஞ்சமுக விநாயகர் ஆலய வசந்த மண்டபத்திற்கு ஆடி அசைந்து செல்லும் காட்சி கண்டு களிக்க வேண்டியதொன்றாகும். எனவே, தேர்த் திருவிழா ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

பஞ்சமுக விநாயகர் பவனி வரும் சித்திரத்தேர் 1986ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. திருநெல்வேலியில் ஆறுமுகம் சிற்பாலயத்தில் சிறந்த சிற்பாசிரியராக விளங்கும் திரு. ஆறுமுகம் சீவரத்தினம் அவர்களின் கை வண்ணத்தில் உருவாகிய இச் சித்திரத் தேர் ஏழு ஆண்டுகள் கழிந்தும் இன்றும் புது வனப்புடன் திகழ்கிறது. மேலும் இச் சித்திரத்தேர் உருவாகுவதற்கு, நீண்டகாலம் இவ்வாலயத்தில் ஒரு தொண்டராகப் பணி புரிந்து வந்து அமரத்துவம் அடைந்த நாகரத்தினம் அவர்களது அரும்பெரும் முயற்சியே உறுதுணையாக இருந்ததை நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர வேண்டும்.

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் துதி

பாதார விந்தம் பணிவார் தமக்கு நின் பாதமலர்
ஆதாரம் நீயன்றி வேறுளதோ அலை வார் கடலில்
போதா ரெழுநரைப் பிறவித் துயரைப் போக்குகின்ற
வேதாரணியனே விறல் வீரகத்தி விநாயகனே!

வேறு

பூதமும் கரணமும் பொறிகள் ஐம்புலனும்
பொருந்திய குணங்கள் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்கும் நாள் எந்நாளோ
வேதமும் சமயமும் வேதமனோகர
இன்ப சாகரனே
ஏதுமொன் றறியேன் யாதுமுன் செயலே
ஏக நாயகனே!

வேறு

ஊரிலே உறவில்லை உதவிகள் செய்து
அஞ்சல் என்பார் ஒருவர் இல்லை
நீரிலே நின்று அலையும் துரும்புபோல்
நெஞ்சம் வைத்துத் தியங்குகின் றேனே
சீருலாவு திருநெல் வேலி நாதனே!

[இப்பாடல்கள் கர்ண பரம்பரையாக இக் கோவிலில் பாடப்பட்டு வருகின்றன]

### வை. அநவரத விநாயகமூர்த்தி

பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகனைத் தரிசிக்க வரும் அடியார்களின் தாகத்தினைத் தீர்க்கும் பொருட்டு திருநெல்வேலி கலாமன்றத்தினர் ஆலயத்தின் தேரோடும் வீதியின் ஒரு புறத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து குளிர்பான வகைகளை அடியார்களுக்கு அன்புடன் அளித்து அரும்பெரும் தொண்டாற்றி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. வெப்பம் அதிகரித்துக் காணப்படும் இந்த நாட்களில் கலா மன்ற உறுப்பினர்கள் ஆற்றி வரும் பணி பாராட்டுக்குரியது.

அத்துடன் இவ்வாலயத்தில் இளைஞர்கள் தாமாகவே முன்வந்து இறை பணியில் ஈடுபடுவதை தினமும் காணக்கூடியதாக இருக்கிறது. அவர்களது சேவையை மனமார வாழ்த்துகிறோம்.

### அன்னதான மண்டபம்

பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தையொட்டி, மாணவர்களிடையே சைவசமய அறிவை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆண்டுதோறும் சமய பாடப்பரீட்சை, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டு, பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறுபவர்



களுக்கு பரிசில்கள் பூங்காவனத் திருவிழாவன்று வழங்கப்பட்டு வருகிறது இவ்வாண்டும் சமய பாடப் பரீட்சை கடந்த 17 02-93 இல் நடைபெற்றது. பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 22 02-93 திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவன்று நடைபெறும்.

நாட்டில் தற்போது நிலவும் கஷ்டமான சூழ்நிலையிலும் அன்பர் ஒருவரின் வேண்டுகோளை ஏற்று, இவ்வாலயத்தின் வடக்கு வீதியில் அன்னதான மண்டபம் ஒன்று மிகவும் குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டு அண்மையில் தைப்பூச நன்னாளில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க திருப்பணியாகும். இந்த அரும்பெரும் திருப்பணியில் முன்னின்று உழைத்தவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ★

## ஆறுதல் அளித்திடுவான்

அடியவருக் கென்றும்
ஆறுதல் அளித்திடுவான்
மிடியதனை நீக்கிடுவான்
மிளிரு திருநெல்வேலிப்
பதியினிலே திருத்தலமாம்
பழங் கிணற்றடியினிலே
கதி யருள வீற்றிருப்பான்
கணபதி தான்
போற்றி! போற்றி!!

—கவிமாமணி

## இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

மேளக் கச்சேரி:

★ த. மகேந்திரன் குழுவினர் (தேவஸ்தானம்)
★ S. சந்தானகிருஷ்ணன் குழுவினர், நல்லூர்
★ K. R. சுந்தரமூர்த்தி குழுவினர், இணுவில்
★ V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர், கோண்டாவில்
★ T. உதயசங்கர் குழுவினர், இணுவில்


திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் வண்ணத் தேரினில் வீதி வலம்வரும் நன்னாளில்
**எமது நல்வாழ்த்துக்களை** அன்பர்கள் அனைவருக்கும் வழங்குகின்றோம்

**புதிய தாரகை புடைவை மாளிகை**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,

**ராம் ஹரன் புத்தகசாலை**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**தாஸ் ஸ்ரோர்ஸ்**
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

**ஸ்ரீ காமாட்சி கூல் பார்**
ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி.

**குறிஞ்சி மருந்தகம்**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

**ஆறுமுகம் சிற்பாலயம்**
காளி கோவிலடி, திருநெல்வேலி

**ஹரன்**
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி

**மலரும் மலர்கள்** வீடியோ, ஸ்டில் படப்பிடிப்பாளர்கள்
சிற்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை

[விளம்பர இல. சி-4606]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அடை வைப்பதற்கு உகந்த சிலம்பு பன்ரம், காப்பிலி பன்ரம், பாமாஸ், நல்ல இன வெள்ளடி முட்டைகள் உடன் விற்பனைக்குண்டு. இல. 70/6, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (24525)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம். (24520)

கிரைண்டர் இரண்டு, சோமசிறி. No. 07, றஸ்ரன் எஞ்ஜின் 18 H. P. ஆகியன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தாஸ் அரைக்கும் ஆலை, மாவடி (அடைக்கலம் கந்தசுவாமி கோவில் எதிர்), வட்டுக்கோட்டை. (5828)

ஜாம் வெற்றுப் போத்தல்கள் தொகையாக விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: N. பாலேந்திரன், இல. 305, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (24469)

## ஒலிவ் ஸ்நானப் பவுடர்

சீயக்காய், வெந்தயம், பயறு, அரப்பு, எலுமிச்சம் கோது, சிரகம் மற்றும் இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரித்தது. எண்ணெய் முழுக்குக்கு இயைந்த இயற்கை சாதனம். பக்கற் விலை ரூபா 3/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. மில்க்வைற். (சி-4536)

## மணமகள் தேவை

27 வயது, அச்சுவினி, 7இல் செவ்வாய், இலக்கண பாவம் 44, B.Sc. Dip-in Computer Science மணமகனுக்கு மணமகள் தேவை. சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணிவரை. செவ்வாய், வியாழன் தினங்களில் பிற்பகல் 2 மணியில் இருந்து மாலை 6 மணிவரை. நேரில் தொடர்பு கொள்ளவும்: சித்திரகலா திருமண சேவை, 71, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (6012)

## துளிர்

தமிழ்நாடு அறிவியல் இயக்கமும், புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ் பாடசாலை மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். விவரங்களுக்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6011)

## புலமைப்பரிசில் பரீட்சை

வருடந்தோறும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை (ஐந்தாவது) 21 - 02 1993 ஞாயிறு முற்பகல் 8, முற்பகல் 11 மணி நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (24512)

## மாற்றம்

20 02-93 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற இருந்த மல்லாகம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் சிவராத்திரியை முன்னிட்டு 07 03-93 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மண்டபத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (5827)

## கல்தேக்கு விதை

கல்தேக்கு விதை நாற்று இடுவதற்குத் தேவை. மில்க்வைற். (சி-4537)

## தேவை

யாழ்ப்பாண நகரில் இயங்கும் கடிகாரங்கள் திருத்தும் ஸ்தாபனம் ஒன்றிற்கு நல்ல அனுபவமுள்ள, நேர்மையான திருத்துனர் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். இல. 886, மே/பா உதயன். (சி-4466)

யாழ்ப்பாண நகரில் இயங்கும் பிரபல கைத்தொழில் வர்த்தகஸ்தாபனம் ஒன்றிற்கு விகிதர் ஒருவர் தேவை. இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். இல. 885, மே/பா உதயன். (சி-4465)

## மணமகன் தேவை

34 வயதுடைய ரோமன் கத்தோலிக்க ஆசிரியைக்கு மணமகன் தேவை. முகவரி: நா. சின்னத்துரை, இல: 16/1, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி. (24522)

## கணித வகுப்பு

ஆண்டு 10, 11 மாணவர்களுக்குத் தனியாகவும், குழு நிலையிலும் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் வீடுகளிற்குச் சென்று கணிதம் கற்பிக்கப்படும். க. பொ. த சா/த விசேட சித்திக்கு நம்பகமானது. விரும்புவோர் தொடர்புகொள்க: இல. 887, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (6015)

---

**விக்னா**

**கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கணக்கியல்

**S. K பிரபாகரன்**
B. B. A.

A/L 92 இல் பரீட்சை எடுத்த மாணவருக்கான

**வினா - விடை மீட்டல்**

சனி - ஞாயிறு 12 - 1

ஆரம்பம்:
21 - 02 - 1993

**A/L 94** சனி ஞாயிறு } 1-2

**A/L 93** சனி ஞாயிறு } 2 - 4-30

அனுமதிகளுக்கு முந்துங்கள்
(சி/4452)

---

**புதிய**

**உயர் கல்லூரி**

ஆரியகுளம சந்தி,
யாழ்ப்பாணம்.

**93 A/L**
(92 பரீட்சை எடுத்த மாணவர்கள் மட்டும்)

மீட்டல்
**வினா - விடை**

ஆரம்பமாகிவிட்டன.

**சனி - ஞாயிறு**

தமிழ்
குழந்தை 1 - 2

இ. நாகரிகம்
அருள்நங்கை 12-1

புவியியல்
சண் 9 - 10

(சி/4468)

---

## இலவச திருமண சேவை

36 வயது, விசாகம், ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். பதிவு செய்பவர்களுக்கு பொருத்தமான குறிப்புகள். ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24460)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள். த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், இல. 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24467)

## வர்த்தகமும் கணக்கீடும்

ஆண்டு 9, 10, 11ஆம் ஆண்டுக்கான வர்த்தகமும், கணக்கீடும் பகுதி 1, பகுதி 11 வெளி வந்துவிட்டது. ஆக்கம்: என். ராஜன், B. Com. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-4456)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு சனி, ஞாயிறு காலை 8—10 மணி. 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (6008)

## DRESS MAKING

Scientific Dress Making புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பம். தொடர்புகொள்க: இல. 376, நாவலர் வீதி, நல்லூர். (24481)

---

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
15 — 10 — 1963



மறைவு:
20 — 02 — 1983

செல்வி

**பிரபாலினி பாலசுப்பிரமணியம்**

(காங்கேசன்துறை)
(வேம்படி மகளிர் உயர்தர விஞ்ஞான வகுப்பு மாணவி)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! அன்பின் சுடரொளியாய் ஒளி வீசி, பண்பின் சிகரமாய் திகழ்ந்து, பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து, இறைவனடி மலர்ந்து வருடம் பத்தாகியும், எம் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் எமது அன்பு பிரபா!

பெற்றோர், சகோதரர்கள்.
உறவினர், நண்பர்கள்.

மானிப்பாய். (24523)

---

**யாழ். பல்கலைக்கழகம்**

# மகாபொல கொடுப்பனவு- 2ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன.

**நான்காம் வருடம்**

| | |
|---|---|
| மருத்துவபீடம்<br>கலைப் பிரிவு | 22 - 02 - 1993 9 - 00 – 12 - 00 முற்பகல் |
| வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு | 24 - 02 - 1993 9 - 00 — 12 - 00 முற்பகல் |
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 02 - 03 - 1993 9 - 00 — 12 - 00 முற்பகல் |

**இறுதி வருட மாணவர்கள்**

மருத்துவ பீடம் - 1984/85, 85/86, 86/87 87/88 தொகுதிகள்

| | | |
|---|---|---|
| கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு | 1987/88 தொகுதி | 22 - 02 - 1993 1 - 30 — 3 - 00 பிற்பகல் |
| வியாபார- நிர்வாகப் பிரிவு | | 24 - 02 - 1993 1 - 30 — 3 - 00 பிற்பகல் |
| பௌதிக- விஞ்ஞானப்பிரிவு<br>உயிரியல்- விஞ்ஞானப்பிரிவு | | 02 - 03 - 1993 1 - 30 — 3 - 00 பிற்பகல் |

**இரண்டாம் வருடம்**

| | |
|---|---|
| மருத்துவ பீடம்<br>கலைப் பிரிவு | 23 - 02 - 1993 9 - 00 — 12 - 00 முற்பகல் |
| வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு | 01 - 03 - 1993 9 - 00 — 12 - 00 முற்பகல் |
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 03 - 03 - 1993 9 - 00 — 12 - 00 முற்பகல் |

**மூன்றாம் வருடம்**

| | |
|---|---|
| மருத்துவ பீடம்<br>கலைப் பிரிவு | 23 - 02 - 1993 1 - 30 – 3 - 00 பிற்பகல் |
| வியாபார நிர்வாகப் பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 01 - 03 - 1993 1 - 30 — 3 - 00 பிற்பகல் |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு | 03 - 03 - 1993 1 - 30 — 3 - 00 பிற்பகல் |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

★ 1984/85, 85/86 86/87, 87/88 தொகுதி மருத்துவ பீட மாணவர்களின் 1990/91ஆம் கல்வியாண்டுக்குரிய 9ஆவது தவணைப் பணமும் 1987 88 தொகுதி கலை, விஞ்ஞானப் பீட மாணவர்களின் 1990/91ஆம் கல்வியாண்டுக்குரிய 10ஆவது கொடுப்பனவும் முறைய 22-02-1993; 24-02-1993; 02-03 1993 திகதிகளில் நிதிப் பிரிவில் வழங்கப்படும்.

- பதிவாளர்.

(சி-4541)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தபால் தாமதம்

கொழும்பில் இருந்து வந்த தபாற் பொதிகளில் இம்முறையும் வெளிநாட்டுத் தபால்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் தபால்களைக் கொழும்பில் படையினர் உடைத்துச் சோதிப்பதாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் அறிய வந்துள்ளது.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக வெளிநாட்டுத் தபால்கள் இங்கு வரவில்லை. அதனால் குடாநாட்டு மக்களில் பெரும்பாலானோர் இக்கடிதங்கள் எப்போது தமது கை வந்து சேரும் என்று எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

சந்தேகத்துக்கு உரிய சில கடிதங்களையே படையினர் உடைத்துச் சோதிப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் வெளிநாட்டுத் தபால்கள் எதுவுமே யாழ்ப்பாணம் வந்து சேராததால் எல்லாமே உடைக்கப்படுவது ஊர்ஜிதமாகிறது.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் வெளிநாட்டுக் கடிதங்களில் என்ன துப்பாக்கிகளும், குண்டுகளுமா வைத்து அனுப்பப்படுகின்றன? — கொழும்பில் படையினர் சோதித்துப் பார்ப்பதற்கு? கடிதங்களை அஞ்சல் செய்வதில் மேல்நாடுகளிடம் இல்லாத பாதுகாப்புப் பரிசோதனை வசதிகள் கொழும்பில் உண்டா?

பாதுகாப்புக் காரணங்களைக் கூறி வெளிநாட்டுத் தபால்களைப் படையினர் உடைத்துப் பார்ப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. யாழ்ப்பாணத்துக்கு விலாசமிடப்பட்ட வெளிநாட்டுத் தபால்களை உடைத்து ஒரு மாதத்தில் மட்டும் இரண்டரை லட்சம் அமெரிக்க டாலர்கள் (சுமார் ஒரு கோடி பதினைந்து லட்சம் ரூபா) திருடப்பட்டிருப்பதாக வெளிவந்த தகவல் உண்மையான காரணங்களில் ஒன்றை எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

தபால்களைப் படையினர் உடைத்துப் பரிசோதனை செய்வது சர்வதேசச் சட்டங்களுக்கு முரணானதாகும். உள்நாட்டு வெளிநாட்டு தபால் விநியோகம் தொடர்பாக ஜெனிவாவில் உள்ள உலக அஞ்சல் சம்மேளனத்துடன் (U.P.U.) ஸ்ரீலங்கா அரசு ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து சேர்ந்த தபால்களுக்கு சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்து கட்டணத்தை செலாவணியில் பெற்ற பின்னர், எந்த நபரின் கடிதத்தையும் அரசு தடுத்து வைக்கமுடியாது. தாமதித்து விநியோகிப்பதோ அல்லது தடுத்து வைப்பதோ மேற்படி ஒப்பந்தத்தை மீறுவதாகும்.

தபாலின் உள்ளடக்கத்தில் சந்தேகம் எழுந்தால் சுங்க அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். சுங்க அதிகாரி விலாசதாரருக்கு அறிவித்து அவருக்கு முன்னாலேயே கடிதத்தை உடைத்துச் சோதிக்க வேண்டும். அதுவே சர்வதேச நடைமுறை.

ஆகையால் தனி நபர் ஒருவருக்கு வரும் கடிதத்தைப் பறிமுதல் செய்யவோ, உடைத்துப் பார்க்கவோ கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு எவ்வித அதிகாரமும் இருக்கமுடியாது. அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் படையினருக்கு உ. அ. சம்மேளன ஒப்பந்தத்தை மீறுவதற்கு அதிகாரம் இரகசியமாக அளிக்கப்பட்டிருக்கிறதா?

அவ்வாறாயின், இது விடயம் உலக அஞ்சல் சம்மேளனத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். எனவே யாழ்ப்பாணத்துக்கு விலாசமிடப்பட்ட தபால்கள் உடைக்கப்படுவது குறித்தும், அவற்றுக்குள் வைத்து அனுப்பப்படும் பணம் தண்டம் விதிக்கப்படாமல் முற்றாகப் பறிமுதல் செய்யப்படுவது திருடப்படுவது — குறித்தும் இங்குள்ள மக்கள் நலன்பேணும் அமைப்புகளும், வெளிநாடுகளில் கடிதங்களை அனுப்பியவர்களும் முறையிட வேண்டும்.

---

### நிவாரண கொடுப்பனவு

இடம்பெயர்ந்தோருக்குரிய — பெப்ரவரி மாதத்தின் முதல் இருவாரங்களுக்குரிய — நிவாரணம் இவ்வாரம் வழங்கப்படவிருக்கிறது.

இந்த நிவாரணத்துக்குத் தேவையான பொருள்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படும் என்றும்—

அரிசி, மா, சீனி, ஆகியவற்றுடன் பட்டாணிக் கடலையும் வழங்கப்படும் என்றும் செயலக அதிகாரி தெரிவித்தார். (உ-3)

### முத்திரைகளும் வந்தன

அண்மையில் இங்கு வந்த குமாரி கப்பலில் யாழ். குடாநாட்டு தபாலகங்களுக்கு தேவையான முத்திரைகளும் எடுத்துவரப்பட்டன.

கடந்த சில தினங்களாக யாழ். குடாநாட்டில் முத்திரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவந்தது வெளியிடங்களில் கூடுதல் விலை கொடுத்து மக்கள் முத்திரைகளை வாங்க வேண்டியிருந்தது தற்போது தபாலகங்களுக்கு வந்து சேர்ந்த முத்திரைகள், வான் கடிதம், வெளிநாட்டு உள்நாட்டுக் கடித உறைகள் வந்து சேர்ந்துள்ளதால் இங்கு நிலவிய தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. [த 109]

---

### மேலும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் பொலன்னறுவை, மாத்தறை, கேகாலை, பதுளை ஆகிய பகுதிகளில் இருந்தே கூடுதலானவர்கள் படையில் சேர்க்கப்பட்டதாகவும் மேலும் கூறப்பட்டது. (உ-3)

---

### எய்ட்ஸுக்கு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

புதிய மருத்துவ முறையை இக்கோடை காலத்தில் எய்ட்ஸ் நோயாளிகளுக்குப் பயன்படுத்தவும் அமெரிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

— இவ்வாறு சென்னைத் தொலைக்காட்சி அறிவித்தது.

#### தாய்வானிலும் வெற்றி

இதற்கிடையில் —

'எய்ட்ஸ்' நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போது பயன்படுத்தப்படும் மூன்று மருந்துகளின் கலவைகளைக் கொண்டு புதிய சிகிச்சை முறை ஒன்றை தாய்வான் நாட்டு இளம் ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

இவரது பரிசோதனையின் போது பரிசோதனைக் குழாய்களில் 'எய்ட்ஸ்' நோயை ஏற்படுத்தும் கிருமிகள் பெருகாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது

மனித உடலிலும் எய்ட்ஸ் நோய் வைரஸ் கிருமிகள் பரவுவதை இதன்மூலம் தடுக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

பரிசோதனை முறையில் இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றுள்ள போதிலும், மனிதர்களுக்கு இம் மருந்தைக் கொடுப்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். [உ-எ]

---

### மகோற்சவ சொற்பொழிவு

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இடம்பெறும் தொடர் சொற்பொழிவு பற்றி—

நேற்றைய உதயனில் இரண்டாம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில் பிரசுர அனுபவிப்பு ''ஆறுமுகம் சிற்றம்பலம்'' எனத் தவறாக அச்சாகிவிட்டது.

அதனை ''ஆறுமுகம் சிற்பாலயம்'' எனத் திருத்தி வாசிக்கவும்.

---

# புலிகளை ஆதரிப்பவர்களுடன் வாழப்பாடிக்கு என்ன வேலை?

## அ.தி.மு.க தலைமைச் செயலர் அரங்கநாயகம் கேள்வி

சென்னை, பெப் 20

விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டுச் சேர வாழப்பாடி ராமமூர்த்தி முயல்கின்றார். முதல்வராகத் தான் வரவேண்டும் என்ற ஆசையில் அவர் போடும் இரட்டை வேடத்தால் தமிழக காங்கிரஸ் அழிவுப் பாதையில் செல்லும் ஆபத்து உண்டு. இதைத் தவிர்க்க தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும்.

தமிழக அமைச்சரும் அ.தி.மு.க. தலைமைச் செயலாளருமான திரு அரங்கநாயகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புதுக்கோட்டையில் நடந்த காங்கிரஸ் கட்சியின் செயல் வீரர்கள் கூட்டத்தில் வாழப்பாடி ராமமூர்த்தி அ.தி.மு.க. — காங்கிரஸ் கூட்டணி முறிவதில் தனக்குக் கவலையில்லை என்று பேசியுள்ளார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கூட்டணிகளை அமைத்தே காங்கிரஸ் கட்சி தேர்தல்களைச் சந்தித்துள்ளது. ராஜீவ்காந்தி மறைவிற்குப் பின் தமிழ்நாடு காங்கிரஸ், அ. தி. மு. க.வுடன் உறவு கொள்வதில் இரட்டை வேடம் போட ஆரம்பித்தது.

உடல் நலத்தோடு இருக்கும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸை, வாழப்பாடி ராமமூர்த்தி அண்மையில் வீடு தேடிச்சென்று பார்த்தார். 75 நிமிடநேரம் அவருடன் உரையாடினார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கட்சி மாநாட்டில் பேரணி நடத்தி, ஆதரவுக் கோஷங்கள் எழுப்பி, தீர்மானங்கள் நிறைவேற்றிய கட்சியின் தலைவரோடு அவருக்கென்ன பேச்சு?

ராமமூர்த்திக்கு தமிழக முதல்வராக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்தால் அது நிறைவேறாது காங்கிரஸ் தனித்து நின்றும் தேர்தலில் ஜெயிக்க முடியாது. எனவே தான் ஏதேனும் மாநிலக் கட்சி ஒன்றுடன் கூட்டுச்சேர அவர் முயல்கிறார். — இவ்வாறு அரங்கநாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-த)

---

### இந்தியா ஒதுங்கியிருந்தால்

# இலங்கை இன பிரச்சினையில் வேறு நாடுகள் தலையிடும்!

## நெடுமாறன் எச்சரிக்கை

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தனது நிலையைத் தெளிவு படுத்த வேண்டும். இந்தியா இனப்பிரச்சினையில் தலையிட்டுத் தீர்வு காணாவிட்டால் வேறு நாடுகள் தலையிடும் நிலை ஏற்படும்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு ப. நெடுமாறன் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆஸ்திரேலியா, கனடா, மொரிஷியஸ், நோர்வே ஆகிய நாடுகள் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இம் முயற்சி வெற்றி பெற்றால் இந்தியாவுக்குத் தான் பிரச்சினைகள் உருவாகும்.

இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை அவரவர்கள் ஊர்களுக்கு அனுப்பி வைக்காமல், இலங்கை இராணுவ முகாம் பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது கவலை தருகிறது — என்றார் நெடுமாறன்.

விழுப்புரத்தில் காந்தி சிலை குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் தான் காரணம் என்று இந்திரா காங்கிரஸ் குற்றஞ் சாட்டுவதையும் நெடுமாறன் வன்மையாகக் கண்டித்தார்.

தமிழகத்தில் இடம்பெறும் வன்செயல்கள் அனைத்துக்கும் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்துவதை இந்திரா காங்கிரஸினர் வாடிக்கையாக்கிக் கொண்டுள்ளனர். இந்திரா காங்கிரஸ் கட்சியினர் தங்களுக்குள் சண்டையிட்டு, தங்களின் தலைகளை உடைத்துக் கொண்டாலும் அதற்கும் விடுதலைப் புலிகள் மீது தான் பழி சுமத்துவார்கள் என்றும் திரு. நெடுமாறன் குறிப்பிட்டார் (உ-எ)

---

# ஈழத் தமிழருக்கு ஆதரவு; போராளிகளுக்கு அல்ல!

## கருணாநிதி கூறுகிறார்

சென்னை, பெப் 20

இலங்கைத் தமிழருக்கு தி. மு. க. தொடர்ந்து ஆதரவளித்து வரும். ஆனால் இலங்கைப் போராளிகளுக்கு ஆதரவளிக்காது.

தி. மு. க தலைவர் மு. கருணாநிதி கரூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்

''ஈழத் தமிழர்களைக் காப்பது எங்கள் கடமையாகும்'' என்றும் அவர் சொன்னார்.

''ஈழத் தமிழர் மத்தியில் ஒற்றுமை இல்லை. ஒற்றுமையோடு அவர்கள் இருக்க நானும் பல முயற்சிகளை மேற்கொண்டேன்'' — என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

### பீரங்கித் தாக்கு

நேற்று நண்பகல் வேளையில் காரைநகர், ஊர்காவற்றுறை, அராலி ஆகிய பகுதிகளிலுள்ள கடலில் பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றது. கடல் கப்பல்களில் இருந்து பீரங்கிச் சத்தம் கேட்டவண்ணமாக இருந்தது.

---

# ராணுவத்துக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிச்சோலை விசாரணைக்குழுவின் தீர்ப்பு எடுத்துக்காட்டுகிறது.

**புலிகளின் யுத்த நிறுத்தம்**

1990 ஆம் ஆண்டு இறுதியில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்த அழைப்பை அரசாங்கம் ஏற்க மறுத்தது. அது அரசியல் முடிவாக இருந்தாலும் அதனை இராணுவம் தான் எடுத்தது

அரச உயர் அதிகாரி ஒருவர் கடந்த ஆண்டு இறுதியில் ஐரோப்பாவில் உள்ள விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை ஒன்றைத் தொடங்குவது பற்றி ஆலோசித்தார்.

ஆனால் அரசு முடிவு எடுக்க இயலவில்லை; அரசு போர் நிறுத்தத்தைத் தரமுடியவில்லை. காரணம் போர் நிறுத்தத்துக்கு இராணுவத்தை உடன்படச் செய்வது கடினம் என்று அரசு கருதியது.

**பிரேமாவுக்கு சங்கடநிலை**

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு இப்போது சங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது. போரை எப்போது நிறுத்துவது போன்ற முடிவுகளை எடுப்பதை இராணுவத்துக்கு விடவேண்டிய நிலையில் அவர் உள்ளார்.

[illegible] றம். இலங்கைச் சமுதாயத்தில் இராணுவம் இதுவரை இவ்வளவு முக்கியத்துவம் பெற்றது இல்லை.

இராணுவம் முழுவதாகச் சிங்கள மயமாகிவிட்டது. இன்று இராணுவத்தில் தமிழர்களே இல்லை என்று சொல்லலாம்

வடக்கு - கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களிலும் இராணுவத்தின் அதிகாரம் தான் உள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸவை பதவி இறக்கம் செய்ய முயற்சிக்கப்பட்ட போது இராணுவம் ஓர் அறிக்கை விட்டது.

ஆட்சியில் உள்ள எந்த அரசுக்கும் இராணுவம் விசுவாசமாக இருக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது

இந்த அறிக்கை தேவை தானா என்று அப்போது கருதப்பட்டது

நாட்டில் ஜே. வி. பி., விடுதலைப் புலிகள் இருந்தும் கூட, ஜனநாயக வடிவம் உறுதியாகத்தான் இருக்கிறது; ஆனால் சமுதாயம் இராணுவமயமாகி விட்டது

இந்த மாற்றத்தால் — இராணுவம் சரியென்று எண்ணினால் — இந்த விரைந்த மாற்றத்தை அது தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது''

— இப்படி அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

---

### தபால்களை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணானதாகும்.

இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் — குற்றவாளிகளாகக் காணப்படுமிடத்து தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றில் மறியல் தண்டனைக்கு உள்ளாக்கப்படலாம் அல்லது அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம். அத்துடன் இவ்விரு தண்டனைகளையும் சேர்த்து வழங்கவும் தபால் கட்டளைச் சட்டம் அனுமதிக்கிறது

அசாதாரணமான அரசியல் சூழ்நிலையில் கூட, ஒருவருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்றை இன்னொருவர் உடைத்துப் பார்ப்பதை சட்டம் பூரணமாகத் தடுக்கிறது.

சட்டத்தின் காவலர்களுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் கூட அவர்கள் அந்தக் கடிதத்தின் முகவரிக்குரிய நபரை அழைத்து அவர் முன்னிலையில் உடைக்க வேண்டும் என சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்

இந்நிலையிலும் தபால்களை உடைக்கும் நடவடிக்கைக்கு அவசரகாலச் சட்டப் பிரமாணங்களின் கீழ் விசேட விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் —

அவ்வாறு விசேட விதிகள் பிறப்பிக்கப்படாத பட்சத்தில் வேறு எக்காரணம் கொண்டும் தபால்கள் உடைக்கப்பட முடியாது என்றும் —

இதுதொடர்பான அவசர விதிகள் எதுவும் ஸ்ரீலங்கா அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படவில்லை என்றும் சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## K. S. சந்தியாப்பிள்ளை

(Retired Librarian St. Patricks College)

K. S. சந்தியாப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மேரி மாகிறெற்றின் அன்புக் கணவரும், அன்ரனீற்றா, ஜோசபின் (ஆசிரியை - திருக்குடும்ப ஆங்கில பாடசாலை), றெஜினோல்ட் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), D C. C. சந்தியாப்பிள்ளை (ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி), ஆகியோரின் தகப்பனாரும் திரு F. C. வேதநாயகம் (ஆசிரியர் புனித சாள்ஸ் வித்தி) திரு. S. J. மதுரநாயகம் (விவசாய விரிவாக்கல் திணைக்களம்- வவுனியா), பவளம், மஞ்சு ஆகியோரின் மாமனுமாவார்.

நல்லடக்கம் இன்று சனிக்கிழமை (20 - 02 - 93) மாலை 3 மணியளவில் சம்பத்திரிசியார் சிற்றாலயத்தில் பூசை பலியின் பின்பு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
D. C. C. சந்தியாப்பிள்ளை
(மகன்)

13/2 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4607)

## கஸ்பார் நீக்கிலஸ்

இல. 182, 2 ஆம் குறுக்கு வீதி — யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. கஸ்பார் நீக்கிலஸ் 19 - 02 - 93இல் காலமாகிவிட்டார்.

இவர் அன்னம்மாவின் (பாக்கியம்) அன்புக் கணவரும், அமலதாஸ் ரணசிங்கம் (களஞ்சிய முகாமையாளர், C.W.E, கொழும்பு), கிறிஸ்ரி ராஜசிங்கம் (ஜேர்மனி), திருமதி றுக்மணி ஆசீர்வாதம் (பிரான்ஸ்), கிலபேட் ஜெயரட்டினம் (ஜேர்மனி), திருமதி ஸ்ரெலா தர்மராஜா, செல்வி அஞ்சலா பேபி, செல்வி ரஞ்சனி (சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பெனடிக்ற் ஆசீர்வாதம் (பிரான்ஸ்) அலோசியஸ் தர்மராஜ் செல்லையா (கூட்டுறவு கல்வி உத்தியோகஸ்தர், அளவெட்டி, மல்லாகம் MPCS), திருமதி யோகராணி ரணசிங்கம், திரு. மோசஸ் பத்திநாதர் ஆகியோரின் மாமனாரும், திருமதி மரியம்மா, தங்கறட்டினத்தின் சிறிய தகப்பனாரும், சிரோமி, டொறின், சிகான், டெறிக், நிலுஷா, நிரோஷன், றுக்ஸி, நிருதன், வசந்தா ஆகியோரின் பேரனுமாவார்.

இன்று (20 - 2 - 93) சனிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அன்னம்மா
(பாக்கியம்)

182, 2ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(24535)

## திருமதி மகேஸ்வரி சின்னத்தம்பி

13-2 93இல் காலமான சிதம்பரம்பிள்ளை சின்னத்தம்பியின் மனைவி மகேஸ்வரி காலமானார். இவர் மாத்தனை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கைதடி தெற்கில் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட பெரிய தமபி நல்லையாவின் இல்லத்தில் (19-2-93) நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் ஜெயேந்திரனின் அன்புத் தாயாரும் (பிரான்ஸ்), வசந்தாவின் (பிரான்ஸ்) அன்பு மாமியாரும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலைக்குச் சமீபமாக உள்ள பெரிய தம்பி நல்லையா வீட்டில் இன்று சனிக்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கைதடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்முகானந்தா

(22945)

## கந்தசாமி விஜயகுமாரன் (குமார்)

(குமரன் கூல்பார், வங்களாவடி, வேலணை)

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், கொக்குவில் மேற்கு ஆடியபாத வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தசாமி விஜயகுமாரன் (குமார்) அகால மரணமானார்.

இவர் கந்தசாமி - மகேஸ்வரியின் மூத்த புதல்வனும், சுகந்தமலரின் அன்புக்கணவரும், சுகந்தகுமாரி, சுகந்தகுமாரன், விஜயமலர், ராஜ்குமார், ரேவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் —

ரெத்தினம் — இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், ரஞ்சனிதேவி, லலிதாதேவி, நேசகுமார் (ஜேர்மனி), லோகநாயகி (ஜேர்மனி), ஜெயகுமார் (ஜேர்மனி), சுபாஷினி, சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று அவரது கொக்குவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜன்
(மைத்துனர்)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.
(24536)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20-02-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்று

தென்மராட்சி, பெப் 20

விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெப்ரவரி மாதத்தில் வீரமரணமடைந்த — தென்மராட்சி கோட்ட சாவகச்சேரி வட்டத்தைச் சேர்ந்த — மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று சனிக்கிழமை அல்லாரை வாணி கல்வி வளர்ச்சிக் கழக மைதானத்தில் நடைபெறும். (ஓ-117)

## நாளை

யாழ்ப்பாணம், பெப் 20

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவினர் ஏற்பாடு செய்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (த-162)

★ ★ ★

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புலோலி பிராந்திய சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்க பொருளாளர்களுக்கான மூன்றாவது பயிற்சிக் கருத்தரங்கு நாளை காலை 9.30 மணிக்கு புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும்.

இதேவேளை உரும்பராய் பிராந்திய சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்க பொருளாளர்களுக்கான இரண்டாவது பயிற்சிக் கருத்தரங்கு நாளை காலை 9.30 மணிக்கு உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெறும். (த-161)

★ ★ ★

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ''திரிசங்கு சொர்க்கம்'' நாடகம் நாளை முற்பகல் 10 மணிக்கும், பின்னர் பிற்பகல் 3 மணிக்கும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறவுள்ளது. (உ-5)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப் 20

கோப்பாய் வடக்கு கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் இன்று மாலை நடத்தும் உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

★ ஸ்ரீ முருகன் அணி எதிர் அண்ணா அணி.

★ கோல்ட் ஸ்ரார் அணி எதிர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி (உ)

## பிரியாவிடை

யாழ் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயராகக் கடந்த 22 ஆண்டுகள் பணியாற்றி, ஓய்வு பெற்றுள்ள பேராயர் டி. ஜே அம்பலவாணரை வாழ்த்தி விடை கொடுக்கும் பிரியாவிடை வைபவம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

மானிப்பாய் மக்கள் சார்பில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மேற்படி பிரியாவிடை நிகழ்ச்சி மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் இடம்பெறும் (உ-5)

## 7 விக்கட்டுகளை இழந்து 239

பம்பாய், பெப் 20

பம்பாயில் நடைபெறும் — இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான —மூன்றாவதும் இறுதியானதுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதலாம் நாளான நேற்று ஆட்ட நேர முடிவின்போது இங்கிலாந்து அணி 7 விக்கட்டுகளை இழந்து 239 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

## ம. எண்ணெய் விநியோகம்

'குமாரி' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மண்எண்ணெய் மானிப்பாய், நல்லூர் ப.நோ. கூ. சங்கப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவிருக்கிறது.

# வானொலி, ரி.வீக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

## சிறிமாவோ அறிவிப்பு

கொழும்பு, பெப்- 20

தொடர்புச் சாதனங்களின் சுதந்திரம் சம்பந்தமான விடயங்கள் குறித்து தாம் நாடாளுமன்றத்தில் விடுத்த அறிக்கை, வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ ஒலிபரப்ப - ஒளிபரப்பப்படவில்லை என்று சிறிமா பண்டாரநாயக்கா குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்சா நினைவுக் கூட்டத்தில் வைத்தே திருமதி பண்டாரநாயக்கா இந்தத் தகவலை வெளியிட்டார்

14 எதிர்க்கட்சிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் எம். பிக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சுயாதீன பத்திரிகையாளர் இணைந்து புதிய அமைப்பு

கொழும்பு, பெப். 20

தெற்கில் சுயாதீன பத்திரிகையாளர்கள் ஒன்றிணைந்து ''சுதந்திர தொடர்பு சாதன ஜனநாயக இயக்கம்'' என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் தொடர்பு சாதனங்களுக்குச் சுதந்திரம் கோரிப் போராடுவதற்காகவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அமைப்பில் எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழிற் சங்கப் பிரமுகர்கள், மாணவர் பேரவை உறுப்பினர்கள், தொடர்பு சாதனப் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

பிரபல பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்சா கொலையுண்ட மூன்றாண்டுகள் நிறைவையொட்டி நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்திலேயே இந்த அமைப்பு நிறுவப்பட்டது (ஓ-6)

## நேற்றிரவு ..

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை வெளியேற்றிய பேரியம் புகையின் காரணமாக இந்த வண்ணக் கோலங்கள் தெரிந்ததாக விண்வெளித் துறையினர் தெரிவித்தனர் என்றும் சென்னை தொலைக்காட்சி அறிவித்தது.

''நாங்கள் எவ்வளவோ முயன்றும் இந்த வண்ணக் கோலங்களை ஒளிப்பதிவு செய்யமுடியவில்லை. ஆனால் கல்பாக்கத்திலும் கூடூரிலும் சிறப்புக் 'கமரா'க்கள் மூலம் இவை படம் பிடிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம் — என்று விண்வெளித் துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-5-72)

## மேகாலயாவில் காங்கிரஸ் அரசு

இந்தியாவின் மேகாலயா மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் அரசு பதவிஏற்றுள்ளது. முதலமைச்சர் எஸ். பி. மாறா தலைமையில் 5 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை நேற்று ஆளுநர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டது.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## தங்கரத்தினம் கயிலாசபிள்ளை

(மாப்பியன் மில், மானிப்பாய்)

தோற்றம்: 27-02-1916 — மறைவு: 20-02-1991

திதி: 27—02—1993

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் எங்கள் மனதை விட்டு நீங்காது நிலைத்திருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

''யோகஸ்தி''
மானிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(24524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org